**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

**“அஞ்சாதீர், நம்பிக்கையை மட்டும் விடாதீர்”**

(மாற்கு 5: 36)

ஏழை-எளியோரின் தேவைகளுக்கு முன்னுரிமை கொடுப்பது திரு அவையின் சமூகப் போதனைகளின் அடிப்படை. நமது தேவைக்கு அதிகமாக இருப்பதைப் பகிர்ந்து கொள்வதில் நாம் ஏழ்மையாகி விடமாட்டோம் என்பது பவுல் அடியாரின் போதனை. ‘ஒவ்வொரு மனிதனின் தேவைகளைப் பூர்த்திச் செய்ய இந்த உலகம் போதுமானது, ஆனால் ஒவ்வொரு மனிதனின் போராசைக்கு அல்ல’ என மகாத்மா காந்தி கூறியிருக்கிறார். ‘மழை காலத்திற்கு’ சேமித்து வைக்க வேண்டும் என்ற கருத்து ஒன்றும் புதிதல்ல. ஆயினும், நமது தேவைகளைக் கடவுள் கவனித்துக் கொள்வார் என்ற நம்பிக்கையில் நம்மிடம் இருப்பதைப் பகிர்ந்து கொள்ள வேண்டுமென புனித பவுல் விரும்புகிறார்.

தர்மம் செய்து ஏழைகளுக்கு ஒருவர் செய்யும் கடமை; அது கிறிஸ்துவில் முழுமையாக வாழ்வதன் பொருள். ஏனெனில் அவர் வழியாக அவருக்காக அனைத்தும் படைக்கப்பட்டன. ‘அவர் அனைத்தையும் படைத்தார். உலகின் உயிர்கள் யாவும் நலம் பயப்பவை’ என சாலமோனின் ஞானத்திலிருந்து எடுக்கப்பட்ட முதல் வாசகம் கூறுகிறது.

சுயநலமின்றி வாழ்ந்த புனித வின்சென் டி பவுல், நாம் பின்பற்றக்கூடிய ஒருவர். நாள்தோறும் சாதாரண பணிகளைச் செய்து கிறிஸ்துவில் அவர் கலந்திருந்தார். காலப்போக்கில் தர்மம் செய்யும் அழைப்புக்கு அவர் இட்டுச் செல்லப்பட்டார். தமது வாழ்வைப் பணயம் வைத்து ஏழைகளுக்கு சேவை செய்தார். குருவாக இருந்தாலும் சரி, துறவறத்தாராக இருந்தாலும் சரி, இருக்கும் இடத்தில் இவ்வாறு செய்ய ஒவ்வொருவரையும் அவர் ஊக்குவித்தார்.

எந்த அளவையால் கொடுப்பீர்களோ அந்த அளவையாக பெறுவீர்கள். பன்னிரெண்டு ஆண்டுகளாய் இரத்தப்போக்கினால் வருந்திய பெண்ணை குணமாக்கி கிறிஸ்து வாழ்வளித்தார். அதே போல் இலவசமாக கொடுங்கள். கொடுப்பதில்தான் நாம் பெறுகிறோம்.

**இன்றைய வாசகங்கள்:**

சாஞா. 1, 13-15;
2, 23-24;

திப. 29, 2, 4-6, 11-13;

2கொரி. 8, 7. 9. 13-15;

மாற்கு 5, 21-43
(or 21-24, 35-43).

INTERNAL CIRCULATION ONLY
BUL 26/2021

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

27 ஜூன் 2021

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொது காலம் 13ம் ஞாயிறு

**எதிர்நோக்கு: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல்**

மாதாந்திர கருப்பொருள்:

**கலாச்சார எல்லைகளை இணைப்போம்**

# எந்த அளவையால் அளக்கிறீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்



கொரிந்து நகர் திரு அவைக்கு புனித பவுல் வழங்கிய செய்தி (2கொரி.8) நமக்கும் பொருந்தும் அனைத்துலகச் செய்தியாகும். தொடக்க கால கிறிஸ்துவர்களின் அடிப்படை வளர்ச்சியை அது குறிக்கிறது. கொரிந்து நகர் திரு அவை வளர்ந்து முதிர்ச்சி அடைந்த போது, ஜெருசலத்திலுள்ள ஏழைகளுக்கு உதவிக்கரம் நல்கிறது. நம்பிக்கையிலும் போதனையிலும் அறிவிலும் மதிப்பிலும் தங்களை மிளிரச் செய்ய ஜெருசலச் சமயப்போதகர்களுக்குக் கைமாறு செய்ய அவர்கள் விரும்பினர். இன்னும் சற்று கூடுதலாக நன்றிப்பெருக்கோடு உதவிகளை வழங்குவதில் உயர்ந்து நில்லுங்கள் என புனித பவுல் அவர்களை வலியுறுத்தினார். இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி புனித பவுல் மேலும் கூறியது, ‘அவர் செல்வராயிருந்தும் உங்களுக்காக ஏழையானார். அவருடைய ஏழ்மையினால் நீங்கள் செல்வராகுமாறு இவ்வாறு செய்தார்’

**CHURCH OF OUR LADY OF FATIMA**
Jalan Sultan Abdul Samad
50470 Kuala Lumpur, Malaysia
Tel: +603.2274 1631 / 2389 7244
Email: fatimachurch@archkl.org
FB: facebook.com/fatima.church
Web: www.fatimachurchkl.com

**Parish Administrator: Rev. Fr. Dr. Clarence Devadass**
**Asst Priest: Rev. Fr. Bernard Hyacinth, SJ**
**Office Administrator: Ms. Juliet Sylus**

*To contact the Parish Office outside office hours, kindly WhatsApp: 016.650 5039 (emergencies only).*

**Parish Office Hours:**
***Office closed during the MCO (until 28 June 2021)***


## முதியோர்க்கான கிறிஸ்துவ புதுமுக சடங்கு (RCIA)

கத்தோலிக்க நம்பிக்கையைப் பற்றி ஆழமாக ஆய்ந்து அறிந்திட உங்களுக்கு அல்லது உங்களுக்கு தெரிந்தவர்களுக்கு ஆர்வமா? உங்கள் கத்தோலிக்க வாழ்க்கைத் துணையோடு ஆலயத்தில் அமர்ந்து, கத்தோலிக்கராக மாற என்ன செய்ய வேண்டும் என பல ஆண்டுகளாக யோசித்துக் கொண்டிருக்கிறீர்களா? கடவுளைத் தேடும் ஒருவரைத் தெரிந்துகொண்டு, அந்த நபரை முதியோர்க்கான கிறிஸ்துவ புதுமுக சடங்கு வகுப்பிற்கு அழைக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் இது ஒரு தனிப்பட்ட அழைப்பாகவும் சவாலாகவும் கருதுங்கள். இந்த செயலின் மூலம் பெரியவர்கள் உரோமைய கத்தோலிக்க திருஅவையில் உறுப்பினர்களாகிறார்கள். நமது பங்கில் எதிர்வரும் ஆகஸ்ட் 2021 முதல் முதியோர்க்கான கிறிஸ்துவ புதுமுக சடங்கு வகுப்பைத் தொடங்கவுள்ளோம். கூடுதல் தகவலுக்கு அல்லது பதிவு செய்ய பங்கு மின்னஞ்சலுக்குச் செல்லவும். fatimachurch@archkl.org

## தேவையில் இருப்போர்க்கு அதிச (BEC) வழி உதவிகள்

நாம் அனைவரும் தற்போது 3.0 நடமாட்ட கட்டுப்பாட்டு உத்தரவு காலக்கட்டத்தில் இருப்பதால், மீண்டும் பலரின் வாழ்வாதாரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக ஏழைகள், தினசரி வருமானம் பெறுபவர்கள், தனியாக வசிக்கும் முதியவர்கள் போன்றோர் அதிகம் பாதிக்கப்படுபவர்களில் அடங்குவர். தயவுசெய்து உங்கள் அதிச (BEC) உறுப்பினர்களை அவர்கள் வசிக்குமிடத்தில் தேடுமாறு கேளுங்கள். இக்காலகட்டத்தில் உணவு தேவைப்படும் குடும்பங்கள் அல்லது தனிநபர்கள் இருந்தால், தயவுசெய்து எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். பங்கின் புனித வின்சன்ட் தி பவுலுடன் இணைந்து, நாங்கள் சில உதவிகளை வழங்க முடியும். இந்த நெருக்கடியான காலக்கட்டத்தில் ஒருவருக்கொருவர் உதவுவோம்.

## சகாய மாதாவுக்கு நவநாள்

இந்த நடமாட்ட கட்டுபாட்டுக் காலத்தில், சகாய மாதாவுக்கு நவநாள் செபங்கள் இயங்கலை வழி ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை 4.00 மணிக்கு நடபெறும். எங்களோடு செபத்தில் இணைய உங்களை அன்போடு அழைக்கின்றோம். இதில் கலந்து கொள்ள நீங்கள் வலையொளி அலைவரிசைக்கு YouTube channel: https://bit.ly/olfkl அல்லது முகநூலுக்கு Facebook Page: facebook.com/fatima.church செல்லவும்.

## ஆலயத்தில் இறப்புத் திருப்பலிகள் (ஜூன் 01, 2021 மேம்படுத்தப்பட்டது)

இந்த நடமாட்ட கட்டுப்பாட்டு உத்தரவு காலத்தில், ஆலயத்தில் இறப்புத் திருப்பலிகள் அதிகபட்சமாக 12 நபர்களுடன் நடத்தப்படும். அனைத்து குடும்ப உறுப்பினர்கள் மற்றும் பங்கேற்பாளர்கள் முன்பே பதிவு செய்யப்பட வேண்டும். இது தொடர்பு தடமறிதலுக்கு இருக்கை எண்கள் ஒதுக்க ஏதுவாக இருக்கும்.

## கருத்தரங்கு வலைத்தளம் (WEBINAR): இணைப்பற்ற உணர்வு நிலை

மேற்றாசன மனநல பணிக்குழு ஏற்பாடு செய்யும் இக்கருத்தரங்கில் அதிகமான உளவியலாளர்கள் ஏன் மன வேதனையையும் துன்பத்தையும் கையாளுவதற்கான ஒரு வழிமுறையாக இணைப்பற்ற உணர்வு நிலையை ஆதரிக்கிறார்கள் என்பதை ஆராய்கிறது. வலைத்தளத்தில் நடைபெறும் இக்கருத்தரங்கு ஜூலை10 2021 காலை 10:00 முதல் 11:15 வரை நடைபெறும். பதிவுக்கு https://tinyurl.com/y6a4wlz9 இணைப்பிற்குச் செல்லவும்.

## பங்கு அலுவலக அடைப்பு

நடமாட்ட கட்டுபாட்டு உத்தரவு காலக்கடட்த்தில் (ஜூன் 28 வரை) நமது பங்கு அலுவலகம் மூடப்பட்டிருக்கும் என்பதை கவனத்தில் கொள்ளவும். அவசரத் தேவை இருப்பின் பங்கு தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொண்டோ குறுஞ்செய்தியோ அனுப்பலாம் 0166505039 அல்லது மின்னஞ்சல் வழியாகவும் fatimachurch@archkl.org தெரியப்படுத்தலாம்.

## பொது திருப்பலிகள் தற்காலிக இரத்து

கோலாலம்பூர் மறைமாவட்ட ஆலயங்களில் பொது திருப்பலிகள் தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டுள்ளதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம். அடுத்த அறிவிப்பு வரும்வரை திருப்பலிகள் இயங்கலை வழி தொடரும். இயங்கலைத் திருப்பலி காண tv.archkl.org. இணைப்புக்குச் செல்லவும்.

## புனித வின்சன்ட் தி பவுல் கழகம் (SSVP)

நமது பங்கைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் ஏழை மற்றும் புறங்கணிக்கப்பட்ட சமூகங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக புனித வின்சன்ட் தி பவுல் கழகமாகிய நாங்கள் பங்குடன் இணைந்து அறப் பணியாற்றி வருகிறோம். மளிகை முறையில் மாதாந்திர உணவுப் பொருட்கள், கல்விக்கான உதவிகளாக புத்தகங்கள், சீருடைகள், பேருந்து கட்டணம் மற்றும் கல்வி கட்டணம். மாதாந்திரச் செலுவுக்காக பண உதவி, வீட்டு வாடகை, மருத்துவ செலவுகள், இறுதிச் சடங்கு செலவுகள் மற்றும் அவசர பண உதவி ஆகியவை வாழ்வாதாரத்தைத் தொடர வழங்கப்படும் உதவிகளில் அடங்கும். வருடாந்திர அடிப்படையில் நாங்கள் 50 குடும்பங்கள் மற்றும் பல முதியோர்களுக்கு உதவுகிறோம். நாங்கள் வழங்கும் இவ்வுதவிகள் சராசரியாக ஒரு மாதத்திற்கு RM6,000 ரிங்கிட்டை எட்டுகிறது. மாதத்தின் முதல் ஞாயிறு காணிக்கை இல்லாத போதிலும், இந்த அறப்பணியை முன்னெடுக்க எங்களுக்கு உதவும் பங்கு உறுப்பினர்களுக்கும் மற்றும் நன்கொடைகளுக்கும் நாங்கள் மிகவே கடமைப்பட்டுள்ளோம்.

## கோவிட்- 19 நிவாரண நிதி

நமது பங்கின் புனித வின்சன்ட் தி பவுல் கழகம், (SSVP) நடமாட்ட கட்டுப்பாட்டு ஆணையால் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ள தனிநபர்களுக்கும் குடும்பங்களுக்கும், குறிப்பாக திடீரென வேலை இழந்தவர்களுக்கு நிதியுதவி அளிக்க தீவிரமாக முயன்று வருகிறது. உதவி தேடுபவர்கள் பெரும்பாலும் தினசரி ஊதியம் பெறுபவர்கள், குறைந்த வருமானம் கொண்ட புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதி சமூகங்களைச் சேர்ந்தவர்கள். கோலாலம்பூர் மறைமாவட்டம் மற்றும் பிற பங்குகளின் ஏழைகளுக்கு உதவும் பணிக்குழுவுடன் நாங்கள் இணைந்து ஒத்துழைத்து வருகிறோம். மேலும் உதவியை நாடுபவர்களுக்கு சரியான நேரத்தில் தகவல் கிடைப்பதை உறுதிசெய்கிறோம். கோவிட் -19 நிவாரண நிதிக்கு இதுவரை பெறப்பட்ட மொத்த நன்கொடைகள் RM 15,440.00. இதிலிருந்து வழங்கப்பட்ட உதவித் தொகை RM 18,190.00 ஆகும். கூடுதல் தொகை இருப்பு நிதியிலிருந்து எடுக்கப்பட்டது.

## பார்வையற்றோர் சமூகத்திற்கு உணவளித்தல்

மலேசிய பார்வையற்றோர் சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க, நமது பங்கு பிரிக்பீல்ஸ் சுற்றுவட்டாரத்தில் வசிக்கும் பார்வையற்றோர் சமூகத்திற்கு ஒவ்வொரு திங்கள் கிழமையிலும் ஒரு உணவுப் பொட்டலத்தின் விலை RM 4.00 என்ற அடிப்படையில் 30 உணவுப் பொட்டலங்களை (கேட்டுக்கொண்டதுக்கேற்ப) வழங்கவுள்ளோம். அடுத்த 4 திங்கள் கிழமைகளுக்கு இதை நாம் செய்யவுள்ளோம். மேலும் மலேசிய பார்வையற்றோர் சமூகத்தோடு இணைந்து இதை நாங்கள் பதிவிடுவோம்.

## கருத்தரங்கு வலைத்தளம் (WEBINAR): தகவல்தொடர்புக்கான தொடர்பு

மறைமாவட்ட மனநல பணிக்குழு ஜூலை 3 சனிக்கிழமை காலை 10:00 மணி முதல் பிற்பகல் 1:00 மணி வரை "அன்பான உறவுகள், மகிழ்ச்சியான இல்லங்கள்" என்ற தலைப்பில் ஒரு வலைத்தள கருத்தரங்கை ஏற்பாடு செய்துள்ளது. இதில் பதிந்து பயன் பெற கொடுக்கப்பட்ட இணைப்பிற்குச் செல்லவும். https://tinyurl.com/y4vnbgzy

## ஞாயிறு காணிக்கைகளும் நன்கொடைகளும்

பொது திருப்பலிகள் இரத்து செய்யப்பட்டிருக்கும் இக்காலக்கட்டத்தில், உங்கள் காணிக்கைகள் அல்லது நன்கொடைகளை 'டச் என் கோ' செயலி (Touch n Go App) வழி அனுப்பும் வசதி இப்பொழுது உள்ளது. தகவல் குறியீட்டை அலகீடு செய்து, (QR scan) உங்கள் தொகையை அதில் சேர்த்து அனுப்பவும். (சேவைக்கான பிடித்தம் ஏதும் இல்லாமல் இருக்க வேண்டும்) அடுத்த நாள் அத்தொகை ஆலய கணக்கு வரவில் சேர்த்துக் கொள்ளப்படும்.

CHURCH OF OUR LADY OF FATIMA

Have your customers scan this QR code to receive payments.

## திருப்பலிக்கு பெயர் ஒப்புக்கொடுத்தல்

இக்காலக்கட்டத்தில் ஆலயமும் ஆலய அலுவலகமும் மூடப்பட்டிருப்பதால், நீங்கள் திருப்பலிக்கு பெயர்களை ஒப்புகொடுத்தலையும், அல்லது நமது பங்கிற்கு பொருளுதவிகளையும் கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு தொடர்ந்து செய்யலாம்.

வங்கி விவரம்
வங்கி/ Bank : CIMB
கணக்கின் பெயர்/ Account Name : Church of Our Lady of Fatima
கணக்கின் எண்/ Account Number : 8000833691
தொகையும் விளக்கமும்
பங்கு அலுவலகம் சரியான முறையில் கணக்கு அறிக்கை வைத்துக் கொள்ள உங்களின் இயங்கலைப் பணப் பறிமாற்றத்தில் (Online Transfer) கீழ்க்கண்ட தகவல்களைக் குறிப்பிடவும்.
1. தொகை
2. நோக்கம் (பின்வருவனவற்றுள் ஏதாகிலும் ஒன்று) திருப்பலி கருத்துகள் (உங்கள் பெயர்களையும் திருப்பலிக்கு ஒப்புக்கொடுக்கும் பெயர்களையும் உள்ளிடவும், எ.கா. நன்றியறிதல்/ சிறப்புக் கருத்து/ ஆன்ம இளைப்பாற்றி)
உறுதியாக்கம் (வைப்பு சீட்டு/ Bank-in-Slip)
பணப்பறிமாற்றத்தை உறுதி செய்து எங்களுக்கு அனுப்பி வைப்பது மிக முக்கியமானது. மின்னஞ்சல்/ Email : fatimachurch@archkl.org அல்லது புலனம்/ Whatsapp: 016-6505039

## திருப்பலிக்கு முன்பதிவு

நடமாட்ட காட்டுபாட்டு உத்தரவு தளர்த்தப்பட்ட பின் திருப்பலிக்கு முன்பதிவு செய்பவர்கள் கீழ்க்காணும் வழிமுறைகளைப் பின்பற்றவும்.

1. அதிச ஒருங்கிணைப்பாளரைத் தொடர்பு கொள்ளுதல்.
2. ஆலய அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளுதல் (03 22741631).
3. இயங்கலைப் பதிவு https://fatimachurchkl.com/management-system

திருப்பலியில் கலந்து கொள்வதற்கான குறுஞ்செய்தியை பெறும் வரை காத்திருக்கவும். குறுஞ்செய்தி கிடைக்கப்பெறா விட்டால், திருப்பலியில் கலந்து கொள்வதை தவிர்க்கவும்.